அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் : 03/2023

எனது இலக்கம் : EST-6/07/AGM/1010
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2023.06.30

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>தாபன விதிக்கோவை 15 பின்னிணைப்பில் உள்ள முறிப் படிவத்தை திருத்தியமைத்தல்</u>**

தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 16 பிரிவின் பால் தங்களது கவனத்தை ஈர்க்கிறேன்.

02. அந்த அத்தியாயத்தின் 16:6 ஆம் உபபிரிவின் படி, தற்காலிக அல்லது நிரந்தரமாக்கப்படாத உத்தியோகத்தர் ஒருவருக்கு சம்பளமற்ற கல்விக்கான லீவினைப் பெற்றுக்கொடுக்கும் போது 09 ஆம் பின்னிணைப்பில் காணப்படும் ஒப்பந்தத்திற்கு மேலதிகமாக, XV ஆம் அத்தியாயத்தின் 4:2 ஆம் உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முறி ஒன்றிலும் கைச்சாத்திடுதல் வேண்டும்.

03. அதன்படி, தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் 15 ஆம் பின்னிணைப்பாக உள்ளடக்கப்பட்டுள்ள முறியில் "முழுமையான சம்பளத்துடன் கல்விக்கான லீவினைப் பெறும் உத்தியோகத்தர்களினால் கைச்சாத்திடப்பட்டுள்ள முறியின் மாதிரிப் படிவம்" ஆக குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பை **"முழுமையான சம்பளத்துடன் / சம்பளமற்ற கல்விக்கான லீவினைப் பெறும் உத்தியோகத்தர்கள் கைச்சாத்திடப்பட வேண்டிய முறி மாதிரிப் படிவம்"** என திருத்தியமைக்கிறேன்.

ஒப்பம்./ கே.டீ.என். ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 0112-699399
தொலைநகல் இலக்கம் : 0112-692158
மின்னஞ்சல் முகவரி : ade-vi@pubad.gov.lk